# ஆவணப்படுத்தல் செயலாக்கத்தை ஆவணப்படுத்தல் செயற்றிட்டறிக்கை - 2023

| | |
|---|---|
| செயற்றிட்ட தலைப்பு | ஆவணப்படுத்தல் செயலாக்கத்தை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0090 |
| செயற்றிட்ட இடம் | யாழ்ப்பாணம், இலங்கை |
| செயற்றிட்ட காலம் | 1 வருடம் |
| செயற்றிட்ட பாதீடு | - |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலகம் நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலக நிறுவனம் |
| முன்மொழிவுத் திகதி | நவம்பர் 2020 |

நூலக நிறுவனம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம், இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

செயற்றிட்டச் சுருக்கம்

நூலக நிறுவனம் மற்றும் பரந்த டிஜிட்டல் நூலகம், காப்பகம், அருங்காட்சியகம் மற்றும் நினைவக நிறுவன சமூகம் ஆகியவை பல்வேறு பகுதிகளில் விரிவான அறிவு, திறன்கள் மற்றும் திறன்களை உருவாக்கியுள்ளன. அவ்வகையே நூலக நிறுவனம் சாந்த்த செயற்பாடுகளை நிறுவனம் சார்ந்து ஆவணப்படுத்தலும் அதன் அணுக்கத்தை சமூகங்களுக்கு கொண்டு சேர்த்தலும் அவசியமான ஒன்றாகும். அதற்கிணங்க ஆவணப்படுத்தல், எண்ணிமப் பாதுகாப்பு, எண்ணிம நூலகம் மற்றும் ஆய்வு சார்ந்த வகைப்பாட்டுள்ள உள்ளடங்கும் நூலக நிறுவன செயற்பாடுகளை ஆவணப்படுத்தலே இத்திட்டமாகும்.

செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

தமிழ் மொழி பேசும் சமூகங்களினை ஆவணப்படுத்துகையில், அந்த சமூகங்களின் மத்தியில் இருந்து தமிழ் மொழியிலே வெளியாகிய எழுத்துப் பதிவுகளை ஆவணப்படுத்துவது முக்கியத்துவம் பெறுகிறது. அவை சார்ந்த வேலைத்திட்டங்களை நூலக நிறுவனம் 2005 முதல் இன்று வரை மேற்கொண்டு

வருகின்றது. அவ்வாறாக நூலக நிறுவனம் சார்ந்த செயற்பாடுகள் என்ன குறிப்பாக ஆவணப்படுத்தல், எண்ணிம பாதுகாப்பு சார்ந்த செயற்பாடுகள், எண்ணிம நூலகம் சார்ந்த விடயங்கள் எவ்வாறு இடம் பெறுகின்றன. ஆகிய விடயங்களை ஆவணப்படுத்தல் முக்கியமாகிறது. அந்த வகையில் நாம் இந்த அறிவினை ஆவணப்படுத்தல் செய்து பகிர்வது அவசியமாகும். அவ்வாறு ஆவணப்படுத்தப்பட்ட பதிவுகளை சமூகத்திற்கு வழங்குதல் ஊடாக நூலகம் சார்ந்த செயற்பாடுகளை விபரிப்பதும் இலகுவாக அமையும். அத்துடன் நூலக நிறுவனம் சார்ந்து இணைந்து கொள்ளும் பணியாளர்களை பயிற்சி அளித்தலுக்கும் இவ்வகையான ஆவணப்படுத்தல் பயன்படும்.

இலக்குகளும் நோக்கங்களும்

நூலக நிறுவனம் சார்ந்த விடயங்களை ஆவணப்படுத்தும் நோக்கில்

- ஆவணப்படுத்தலை ஆவணப்படுத்தல்
- திறந்த அணுக்கம்
- திறந்த நிறுவனம்
- நிறுவன ரீதியான அறிவுப்புலம்
- எண்ணிமப்படுத்தல் செயற்பாடுகள்
- நூலக நிறுவன செயற்றிட்டங்கள்
- சமூகம் சார்ந்த நடைமுறைகள் போன்ற பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மேற்கூறிய ஆவணப்படுத்தல் மிகவும் அவசியமாகும்.

முக்கிய பங்குத்தாரர்கள்

- நூலக நிறுவனம்
- நூலக நிறுவன பணியாளர்கள்
- தன்னார்வலர்கள்

செயற்பாடுகள்

| செயற்பாடு | |
|---|---|
| ஆவணப்படுத்தல் | ஆவண ஒளிப்படம் எடுத்தல்<br>வாய்மொழி வரலாறுகளைப் பதிவுசெய்தல்<br>புகைப்படங்களை எடுத்தல்<br>ஆவணப்படம் எடுத்தல்<br>வாழ்க்கை வரலாறுகள் எழுதல்<br>பல்லூடக ஆவணப்படுத்தல்<br>தொழிற்கலை ஆவணப்படுத்தல்<br>ஊர் ஆவணப்படுத்தல்<br>நிகழ்வுகளை பதிவு செய்தல் |
| எண்ணிமப் பாதுகாப்பு | மின்வருடல் - கைமய முறை<br>மின்வருடல் - தாள் செலுத்தி முறை<br>மின்வருடல் - ஒளிப்படக் கருவி முறை<br>பெரிய அளவு மின்வருடல்<br>சுவடிகள் மின்வருடல்<br>எண்ணிமப்படுத்தல் சீர்தரங்கள்<br>கோப்பு வகைகள் |

| | |
|---|---|
| | கோப்பு முழுமைப்பாடு சரிபார்ப்பு<br>ஆவணக தக்வல் பொதி உருவாக்கம் (பை சீர்தரம்)<br>தமிழ் எழுத்துணரியாக்கம்<br>ஒலிநூல் உருவாக்கம்<br>மின்னூல் உருவாக்கம்<br>எண்ணிம சேமிப்பகங்கள்<br>காப்புப்படி எடுத்தல் |
| எண்ணிம நூலகம் | மீதரவுகள் அறிமுகம்<br>மீதரவுச் சீர்தரங்கள்<br>மீதரவுச் சீர்தரங்கள்<br>மீதரவுச் சீர்தரங்கள்<br>பட்டியலாக்கம்<br>ஆவணக விபரிப்பு<br>வகைப்படுத்தல்<br>அதிகாரபூர்வப் பதிவுகள் |
| ஆய்வு | இணைய ஆய்வு<br>ஆய்வு வழிகாட்டி உருவாக்கம் |

அடைவுகள்

- மீதரவு காணொளிகள் ஐந்து பூரணமாக்கப்பட்டு செம்மையாக்கப்பட்டு இறுதி வடிவம் பெறப்பட்டுள்ளது.
- ஒலைச் சுவடிகள் சுத்தம் செய்தல் காணொளி இறுதி வடிவம் பெறுவதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்டது.
- ஒலைச் சுவடிகள் பிரித்தெடுத்தல் காணொளி முடிவடைந்துவிட்டது. குரல்பதிவு இன்னும் பூரண்ப்படுத்தப்படவில்லை.
- A4 மின்வருடல் காணொளியானது இறுதி வடிவம் பெறுவதற்கு முன் நிராகரிக்கப்பட்டது.
- காப்புப்படி காணொளிகள் ஏழு பூரணமாக்கப்பட்டு செம்மையாக்கப்பட்டு இறுதி வடிவம் பெறப்பட்டுள்ளது

எதிர்கொண்ட சாவல்கள்

- ஒலிவாங்கியில் குரல் பதிவு செய்வதில் ஊழியர்களுக்குள்ள பயமும் தயக்கமும்
- தொழில்முறை குரல் பதிவு நிபுணர்களை வரவழைத்து பதிவு செய்வதற்கான நிதி இல்லாமை அத்துடன் ஒலிவாங்கியின் குறைவான வினைதிறன்.
- ஒரு ஊழியர் மட்டும் தனியாக வேலை செய்வதால் ஒரு காணொளி உருவாவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- தன்னார்வலர்களின் உதவியை முழுமையாக பெற்று கொள்வதனூடக குரல் பதிவு மற்றும் காணொளியை உருவாக்குவதற்கு தேவையான உதவிகளை பெற முடியும்.